2018 மே 29]

இரண்டும், அரசு நிதி உதவி பெறும் கல்லூரிகள் மூன்றும், சுயநிதிக் கல்லூரிகள் 16-ம், பல்கலைக்கழகத்தினுடைய அரசு உறுப்புக் கல்லூரிகள் இரண்டும் இருக்கின்றன. அந்தப் பகுதியிலே இருக்கின்ற மாணவர்களுடைய சேர்க்கைக்கேற்ப கல்லூரிகள் அமைந்திருக்கின்றன. கடந்த 2 ஆண்டுகளாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழியில் தொடர்கின்ற இந்த அரசு, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மாணவர்கள் அதிக அளவில் சேருகின்ற காரணத்தால் கூடுதலாக அரசுக் கல்லூரிகளிலே 20 சதவிகித மாணவர்களின் சேர்க்கைக்கும், அரசு உதவி பெறும் கல்லூரிகளிலே 15 சதவிகித கூடுதல் சேர்க்கைக்கும், சுயநிதிக் கல்லூரிகளிலே 10 சதவிகித கூடுதல் சேர்க்கைக்கும் வழிவகை செய்து, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் படிக்க வேண்டுமென்று நினைக்கின்ற மாணவர்களுக்குத் தேவையான இடங்களைப் பூர்த்தி செய்து வருகிறது. அதுபோல, வரக்கூடிய காலகட்டங்களில் திண்டுக்கல் மாவட்டத்திலே ஆய்வு செய்து, தேவையிருப்பின் மாணவர்களின் சேர்க்கைக்குண்டான வசதிகளை அரசு செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 74, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன், மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

74—

புதிய நியாய விலைக் கடை

***7551—திரு. மா. சுப்பிரமணியன்:**

மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சைதாப்பேட்டை தொகுதி, 170-வது வார்டு, பூந்தமல்லி சாலையில் உள்ள அமுதம் பல்பொருள் அங்காடியை இரண்டாகப் பிரித்து, அச்சுதன் நகரில் புதிய நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2018 மே 29

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கண்ணால் கண்ட தெய்வம், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களுக்கு என்னுடைய அஞ்சலியையும், வணக்கத்தையும் முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வார்டு எண் 170, அச்சுதன் நகரில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் 3 நியாய விலைக் கடைகள் நடத்தப்பட்டு வருகின்றன. அதில், நியாய விலைக் கடை எண் 1-1,252 குடும்ப அட்டைகளையும், அச்சுதன் நகர் அமுதம் நியாய விலைக் கடை எண் 2-976 குடும்ப அட்டைகளையும், அச்சுதன் நகர் நியாய விலைக் கடை எண் 3-799 குடும்ப அட்டைகளையும் கொண்டு, அச்சுதன் நகர் பகுதியிலேயே செயல்பட்டு வருகின்றன. எனவே, உறுப்பினர் கோரிய அதே அச்சுதன் நகர் பகுதியில் இன்னொரு கடை ஆரம்பிக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள்.*

திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 170-வது வார்டில், அச்சுதன் நகர் அமைந்திருக்கிற பூந்தமல்லி நெடுஞ்சாலையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிற கடை எண் 1, 2 மற்றும் 3 ஆகியவற்றில் ஒரே கட்டடத்தில் இரண்டு கடைகளும், கணபதி நகர் என்கின்ற இன்னொரு பகுதியில் ஒரு கடையும் அமைந்திருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல அங்கே அமைந்திருக்கிற அந்த மூன்று கடைகளில் இரண்டு கடைகள் ஒரே கட்டடத்தில் சிறிய இடத்தில் அமைந்திருப்பதாலும், பழங்காலக் கட்டடம் ஒன்றில் அமைந்திருப்பதாலும், உணவுப் பொருட்கள் பாதுகாப்பற்ற நிலையில் இருப்பதும், இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட குடும்ப அட்டைதாரர்கள் வரிசையில் நின்று வாங்குவதற்கு மிகப் பெரிய*

2018 மே 29]

அளவில் சிரமப்படுவதாலும்தான் அங்கிருக்கிற கடைகளை மாற்றித் தர வேண்டுமென்கின்ற கோரிக்கை வைக்கப்பட்டிருக்கின்றது. அதேபோல், கணபதி நகரில் இருக்கின்ற அந்த மூன்றாவது கடையையும் உடனடியாகக் காலி செய்திட வேண்டுமென்று வீட்டு உரிமையாளர்கள் அதிகாரிகளிடம் தொல்லை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த மூன்று கடைகளையும் ஏதாவது அரசு இடத்தில் அமைக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. பூந்தமல்லி நெடுஞ்சாலையில், குறிப்பாக அச்சுதன் நகரில் ஒரே கட்டடத்தில் இயங்கிக் கொண்டிருக்கிற அந்த இரண்டு கடைகளைத் தனியாகப் பிரித்து அச்சுதன் நகரின் வேறொரு பகுதிக்கு மாற்றிட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்மூலம் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவருடைய தொகுதியிலுள்ள அச்சுதன் நகர் பகுதியில் ஒரே கட்டடத்தில் இரண்டு கடைகளும், கணபதி நகரில் ஒரு கடையும் இயங்கிக் கொண்டிருக்கின்றன; கட்டடங்கள் பாதுகாப்பற்ற நிலையில் இருக்கின்றன என்கிற தகவலை இங்கே சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கட்டடங்களெல்லாம் ஆய்வு செய்யப்படும். மாநகரத்தைப் பொறுத்தவரை இடம் கிடைப்பதில் பெரிய சிரமம் இருக்கிறது. எனவே, தேவையான இடம் கிடைக்கிறபோது, அதற்குரிய ஏற்பாடுகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, நிச்சயமாக, உறுதியாக செய்து கொடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள்.*

திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையைப் பொறுத்தவரை, அது உணவுப் பொருள் வழங்குகிற துறையாக இருந்தாலும் அல்லது கூட்டுறவுத் துறைக்குச் சொந்தமான கடைகளாக இருந்தாலும், ஏறத்தாழ 60, 70 சதவிகித கடைகள் தனியார் கட்டடங்களிலே, மிகக் குறுகிய இடங்களிலே, பாதுகாப்பற்ற தன்மையில் இயங்கிக் கொண்டிருக்கின்றன*

[*2018 மே 29*

என்பதை உறுப்பினர்கள் அனைவரும் நன்றாக அறிவார்கள். எனவேதான், தி.மு. கழக மாநகராட்சி நிருவாகத்தின்போது, இன்றைய தி.மு. கழகத்தின் செயல் தலைவர், அன்றைய துணை முதல்வர், 'சென்னை மாநகராட்சி எல்லைக்குள் எங்கேயெல்லாம் மாநகராட்சி காலியிடங்கள் இருக்கின்றனவோ, அந்தக் காலியிடங்களை உணவுப் பொருள் வழங்கல் துறைக்கு மாநகராட்சி மன்றக் கூட்டங்களில் தீர்மானங்களை நிறைவேற்றித் தந்திட வேண்டும்' என்று உத்தரவிட்டார்கள். அந்த வகையில் ஏறத்தாழ 200-க்கும் மேற்பட்ட புதிய கடைகளை அமைத்துக்கொள்வதற்கு மாநகராட்சி இடங்கள் உணவுப் பொருள் வழங்கல் துறைக்கு தரப்பட்டன.

அதோடுமட்டுமல்லாமல், அன்றைய உணவுத் துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்களின் வேண்டுகோளுக்கேற்ப, தொகுதிக்கு ஓர் உதவி ஆணையர் அலுவலகம் வேண்டுமென்கின்ற கோரிக்கையும் வைக்கப்பட்டது. எனவே, உணவுப் பொருள் வழங்கல் துறை என்பது அத்தியாவசியமான துறை என்பதால், மாநகராட்சியின் இடங்கள் தொகுதிக்கு ஒன்று என்று அன்றைக்கு மாநகராட்சியின் சார்பில் வழங்கப்பட்டது. இப்போது எதிர்க்கட்சியில் இருக்கின்ற உறுப்பினர்கள் சென்று காலியாக உள்ள இடத்தை உணவுப் பொருள் வழங்கல் துறைக்குத் தாருங்கள் என்றால் தர மாட்டார்கள். எனவே, இன்றைக்கு சென்னை மாநகரம் போன்ற பெரிய இடங்களில் மாநகராட்சி, குடிசை மாற்று வாரியம், வீட்டு வசதித் துறை, பொதுப் பணித் துறை, அறநிலையங்கள் துறை என்று பல்வேறு துறைகளுக்குச் சொந்தமான, காலியாக இருக்கிற இடங்களைக் கண்டறிந்து, மாண்புமிகு அமைச்சர் அவர்களே அதற்கு முழுப் பொறுப்பேற்று, இது அத்தியாவசியமான துறை என்பதாலே மற்ற துறைகளோடு பேசி, சென்னை மாநகரில் வேறு துறைகளுக்குச் சொந்தமான காலியிடங்கள் எங்கெல்லாம் இருக்கின்றனவோ, அந்த இடங்களை இந்தத் துறைக்கு தரச் சொல்லி வாங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். ஆண்டுதோறும் நிதிநிலை அறிக்கையில் உணவுப் பொருளுக்கென்று தனியாக நிதியினை ஒதுக்கீடு செய்வதைப்போல், ஆண்டொன்றுக்கு சுமார் 300, 400 புதிய கடைகளை உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறையே கட்டுவதற்கான ஏற்பாட்டினைச் செய்ய முன்வருமா என்பதைத் தங்களின்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

2018 மே 29]

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தினை இந்தியாவிலேயே வெகு சிறப்பாகச் செயல்படுத்திக் கொண்டிருக்கிற மாநிலம் தமிழ்நாடு (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக நான் தெரிவித்துக்கொள்கிறேன். எப்படியென்று சொன்னால், மற்ற மாநிலங்களிலெல்லாம் சராசரியாக 900 குடும்ப அட்டைகளுக்குத்தான் ஓர் அங்காடி என்கிற விதத்திலே கடைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆனால், தமிழ்நாட்டில் மட்டும் 560 குடும்ப அட்டைகளுக்கு ஓர் அங்காடி என்கிற வகையில், இன்றைக்கு தமிழகத்தில் பொது விநியோகத் திட்டம் மிகச் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தங்களுடைய ஆட்சியில் செய்த சாதனைகளையெல்லாம் சொன்னார்கள்.*

முற்பகல் 11-05

எங்களைப் பொறுத்தவரை, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலம் என்பது உணவுத் துறையினுடைய பொற்காலம் என்பதனை இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எப்படியென்றால், விலையில்லா அரிசி வழங்கும் திட்டத்தை தமிழகத்தில் அறிமுகப்படுத்தி, விலையில்லா அரிசி வழங்கும் திட்டம் மற்றும் தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டம் ஆகிய இரண்டு திட்டங்களையும் செயல்படுத்துகிற ஒரே மாநிலமாக தமிழ்நாடு இன்றைக்கு விளங்கிக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

அந்த வகையில், சென்னை பெருநகரைப் பொறுத்தவரையில், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்பொருள் பாதுகாப்புத் துறையின்கீழ், 2 துணை ஆணையாளர்கள் மற்றும் 17 மண்டலங்களின் உதவி ஆணையாளர்கள் கட்டுப்பாட்டின்கீழ், 1,750 முழுநேர நியாய விலை அங்காடிகள், 10 பகுதிநேர நியாய விலை அங்காடிகள் என மொத்தம் 1,760 நியாய விலை அங்காடிகள் இயங்கி வருகின்றன. இவற்றுடன், 19,28,949 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டு, அத்தியாவசியப் பொருட்களின் விநியோகம் சீராக நடைபெற்று வருகின்றது என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக, சைதாப்பேட்டை மண்டலத்தில் 35 அமுதம் நியாய விலை அங்காடிகள், 85 கூட்டுறவு அங்காடிகள் என 120 அங்காடிகள் சிறப்பாகச் செயல்பட்டு, 1,28,491 குடும்ப அட்டைகளுக்கு அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அதுமட்டுமல்லாமல், சைதாப்பேட்டை தொகுதியில் மட்டும் அம்மா அவர்களுடைய கடந்த ஆட்சிக் காலத்தில் 5 புதிய கடைகள் தொடங்கப்பட்டிருக்கின்றன என்பதனையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மற்ற எல்லா ஆட்சிக் காலங்களையும்விட, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலங்களில் அங்காடிகளுக்குப் புதிதாகக் கட்டடங்கள் தொடர்ந்து கட்டப்பட்டன, தற்போதும் கட்டிக் கொடுக்கப்பட்டு வருகின்றன என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 75, மாண்புமிகு உறுப்பினர் திரு. C.V. சேகர், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

75—

மருத்துவமனைக்குக் கட்டடம்

***5082—திரு. C.V. சேகர்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனைக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிவோடு வணங்குகின்றேன்.*

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனை, பல்வேறு பிரிவுகளுடன் 202 படுக்கை